MLWA HSS Madurai - 625001 (Run by Jain Educational and Empowerment Trust)

3 Mark Problem Only L 1 - L 2

Date : 16-Jan-19

12th Standard

# கணக்குப்பதிவியல்

Reg.No. :

**Prepared by M.MuthuSelvam Cell No : 9842104826**

Time : 02:00:00 Hrs

Total Marks : 120

**Answer All**

40 x 3 = 120

1) 2005 மார்ச் 31-ஆம் நாளைய இருப்பாய்வின்படி சம்பளம் ரூ.1,50,000 மார்ச் 2005க்கான சம்பளம் ரூ. 4,000 இன்னமும் கொடுபடவில்லை.உரிய சரிக்கட்டுப் பதிவு தந்து இவைஇறுதிக் கணக்குகளில் எவ்வாறு இடம் பெறும் எனக் காட்டுக.

2) 31.3.2015 அன்றைய இருப்பாய்வு கீழ்கண்டவற்றை வெளிப்படுத்துகிறது.

| | |
|---|---|
| முதல் | 5,00,000 |
| எடுப்புகள் | 50,000 |

எடுப்பு மீது வட்டி 5% அனுமதிக்க.சரிக்கட்டுப் பதிவும்,மாற்றுப் பதிவும் தந்து, இவை இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

3) தேவையான கணக்குகள் தயார் செய்து மொத்த கொள்முதல் மற்றும் மொத்த விற்பனை காண்க:

| | ரூ |
|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | 1,00,000 |
| தொடக்க பற்பல கடனீந்தோர் | 65,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 5,90,000 |
| பெற்ற தள்ளுபடி | 3,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 40,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| வெளித் திருப்பம் | 10,000 |
| உள் திருப்பம் | 6,000 |
| இறுதி பற்பல கடனாளிகள் | 70,000 |
| இறுதி பற்பல கடனீந்தோர் | 50,000 |
| ரொக்க விற்பனை | 50,000 |
| ரொக்கக் கொள்முதல் | 25,000 |

4) 31.12.2000 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனீந்தோர் ரூ.10,000.
சரிக்கட்டுதல்: பற்பல கடனீந்தோர் மீது தள்ளுபடி $2\frac{1}{2}$ % ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும்.இவ்விவரம் இலாப நட்டக்கணக்கிலும்,இருப்பு நிலைக்குறிப்பிலும்எவ்வாறுஇடம்பெறும்?

5) சரிகட்டுப் பதிவு தந்து இவ்விவகாரம் இறுதிக் கணக்குகளில் (31.3.04) எவ்வாறு இடம் பெறும் எனக்காட்டுக
குறிப்பு எழுதுக
(அ ) முன் கூட்டிச் செலுத்திய செலவுகள்
(ஆ ) கொடுபட வேண்டிய செலவுகள்
(இ ) வாராக்கடன்
(ஈ ) முன்கூட்டிப் பெற்ற வருமானங்கள்

6) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு இறுதி பற்பல கடனாளிகளையும்,இறுதி பற்பல கடனீந்தோரையும் கணக்கிடுக.

| | ரூ |
|---|---|
| 1.4.2002 அன்று பற்பல கடனாளிகள் | 30,000 |
| 1.4.2002 அன்று பற்பல கடனீந்தோர் | 41,000 |
| கடன் கொள்முதல் | 1,50,000 |
| கடன் விற்பனை | 1,70,000 |
| பெற்ற தள்ளுபடி | 5,000 |
| அளித்த தள்ளுபடி | 6,000 |
| கொள்முதல் திருப்பம் | 7,500 |
| விற்பனைத் திருப்பம் | 6,500 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,50,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 1,40,000 |

7) திரு.ரவி அவர்கள் முழுமை பெறா இரட்டைப் பதிவு முறையில் ஏடுகளைப் பராமரித்து வருகிறார்.2002 ஏப்ரல் 1 அன்று அவருடைய முதல் ரூ.60,000. 2003 மார்ச் 31 அன்று அவருடைய நிலை பின்வருமாறு இருந்தது.

| | ரூ. |
|---|---|
| ரொக்கம் | 10,000 |
| வங்கி | 40,000 |
| பற்பல கடனாளிகள் | 60,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 |
| சரக்கிருப்பு | 50,000 |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 5,000 |
| அறைகலன் | 1,00,000 |
| இயந்திரம் | 1,25,000 |
| பற்பல கடனீந்தோர் | 5,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டு | 25,000 |
| கொடுக்கப்பட வேண்டிய செலவுகள் | 5,000 |
| கடன் (வரவு) | 20,000 |

ஆண்டு இடையில் அவர் இட்ட கூடுதல் முதல் ரூ.20,000.
ஆண்டு இடையில் சொந்த பயனுக்காக அவர் திரும்ப எடுத்த தொகை ரூ.30,000.
2003 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

8) திரு. மோகனின் 2002 மார்ச் 31 ஆம் நாளைய இருப்பாய்விலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

2002 மார்ச் 31ஆம் நாளைய இருப்பாய்வு

| விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 60,000 | |
| வாராக்கடன் | 5,000 | |
| வாரா ஐயக் கடன் ஒதுக்கு | | 10,000 |

சரிகாட்டுதல்கள் :
பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக் கடன் ஒதுக்கு உருவாக்குக.

சரிகட்டுப் பதிவு தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

9) 31.3.05 அன்றைய இருப்பாய்வின்படி முதல் ரூ.6,00,000.முதல் மீது வட்டி 6% அனுமதிக்க.சரிக்கட்டுப் பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக.இவ்விவரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு இடம்பெறும் எனக் காட்டுக.

10) 31.3.05 அன்றைய இருப்பாய்வின்படி கழிவு பெற்றது ரூ.10,000.கூடியுள்ள கழிவு இன்னமும் பெறாதது ரூ.4000.சரிக்கட்டுப் பதிவு தந்து, இவ்விபரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

11) 31.3.2003 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.90,000.
சரிக்கட்டுதல்: கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக .சரிக்கட்டுப் பதிவு தந்து இவ்விவரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

12) கீழ்காணும் விவரங்கள் திரு.நவீன் அவர்களின் 31.3.2003 அன்றைய இருப்பாய்விலிருந்து எடுக்கப்பட்டவை

| விவரம் | பற்று ரூ. | வரவு ரூ . |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 1,20,000 | |
| வாரா கடன் | 10,000 | |
| வாரா ஒதுக்கு ஐயக்கடன் | | 20,000 |

சரிக்கட்டுதல் : பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக
சரிகட்டுப் பதிவு தந்து , இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு இடம் பெறும் எனக் காட்டுக

13) கீழ்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு தேவையான சரிகட்டுப் பதிவுகள் தருக
1. எடுப்பு மீதான வட்டி ரூ. 10,000
2. கொடுபட வேண்டிய கடன் மீதான வட்டி ரூ.4,000
3. இயந்திரம் ரூ.5,00,000 மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும் .
4. வாராக் கடன் ரூ. 3,000 போக்கெழுதப்படவேண்டும்
5. பற்பல கடனாளிகள் ரூ.30,000 மீது 2% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக
6. பற்பல கடனீந்தோர் ரூ.50,000 மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக

14) 31.3.05 அன்றைய இருப்பாய்வின்படி வாடகை பெற்றது.ரூ.30,000. முன்கூட்டிப்பெற்ற வாடகை ரூ.6,000 சரிக்கட்டுப் பதிவு தந்து, இவ்விவரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

15) 31.3.2003 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.90,000.
சரிக்கட்டுதல்: கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.சரிகட்டுப் பதிவு தந்து , இவ்விவகாரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு இடம் பெறுக எனக் காட்டுக

16) திரு.ஆனந்த ரூ 2,00,000 முதலுடன் 1.04.2015 அன்று தொழில் தொடங்கினர்.அவர் ரூ 10,000 தன் சொத்து செலவிற்கு எடுத்துக் கொண்டார். அவர் 50,000 கூடுதல் முதலாக இட்டார். அவருடைய 31.03.2015 அன்றைய நிலை கீழே தரப்பட்டுள்ளது

| | ரூ |
|---|---|
| வாங்கி இருப்பு | 10,000 |
| சரக்கிருப்பு | 80,000 |
| பற்பல கடனாளிகள் | 40,000 |
| அறைகலன் | 3,000 |
| கை ரொக்கம் | 5,000 |
| பற்பல கடனீந்தோர் | 30,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 2,000 |

அவர் தனது கணக்குகளை ஒற்றைப்பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 2014-2015 ஆம் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் கண்டறிக

17) 31.3.2002 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.1,25,000.
சரிக்கட்டுதல்கள்:
(1) ரூ.5,000 வாராக்கடன் போக்கெழுதுக.
(2) பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
(3) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.
பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

18) கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தருக.
(அ) எடுப்புகள் மீதான வட்டி ரூ.10,000
(ஆ)கடன் மீதான வட்டி கொடுபடவேண்டிய ரூ.5,000
(இ)அறைகலன் ரூ.50,000 மீது 5% தேய்மானம் நீக்கப்பட வேண்டும் .
(ஈ) வாராக்கடன் ரூ.3,000 போக்கெழுதுக.
(உ) பற்பல கடனாளிகள் ரூ.4,00,000 மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
(ஊ)பற்பல கடனீந்தோர் ரூ.3,50,000 மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

19) 31.3.2002 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.1,50,000 கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.சரிக்கட்டுப் பதிவு தந்து, இவ்விவரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

20) திரு.இராஜன் அவர்கள் முழுமை பெறா இரட்டைப் பதிவு முறையில் ஏடுகளைப் பராமரித்து வருகிறார்.அவருடைய 1.4.2003 மற்றும் 31.3.2004 அன்றைய நிலை கீழே தரப்பட்டுள்ளது.

| **விவரம்** | **1.4.2003 ரூ** | **31.3.2004 ரூ** |
|---|---|---|
| வங்கி இருப்பு | 3,500(Cr.) | 4,500(Dr.) |
| ரொக்கம் | 200 | 300 |
| சரக்கிருப்பு | 3,000 | 4,000 |
| பற்பல கடனாளிகள் | 8,500 | 7,600 |
| பொறியும், பொறித் தொகுதியும் | 20,000 | 20,000 |
| அறைகலன் | 10,000 | 10,000 |
| பற்பல கடனீந்தோர் | 15,000 | 18,000 |

திரு.இராஜன் அவர்கள் தனது சொந்த பயன்பாட்டிற்காக ரூ.20,000 திரும்ப எடுத்துக் கொண்டார்.பற்பல கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டும்.அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.
2004 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

21) கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு உரிய கணக்குகளைத் தயாரித்து கடன் விற்பனை மற்றும் கடன் கொள்முதலைக் கணக்கிடுக.

| **விவரம்** | **ரூ** |
|---|---|
| பற்பல கடனாளிகள் - தொடக்க இருப்பு | 50,000 |
| பற்பல கடனீந்தோர் - தொடக்க இருப்பு | 30,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 3,00,000 |
| பெற்ற தள்ளுபடி | 1,500 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 20,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள் திருப்பம் | 6,000 |
| வெளித் திருப்பம் | 8,000 |
| பற்பல கடனாளிகள் - இறுதி இருப்பு | 35,000 |

**விவரம்** **ரூ**
பற்பல கடனீந்தோர் - இறுதி இருப்பு 25,000

22) கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்குரிய சரிக்கட்டுப் பதிவுகள் தருக
1. முதல் ரூ.11,000 மீது 6% வட்டி அனுமதிக்க
2. முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு ரூ.2,500
3. கொடுபட வேண்டிய கூலி ரூ.1,500
4. முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ரூ.2,000
5. இறுதிச் சரக்கிருப்பு ரூ.2,00,000
6.முன் கூட்டிப் பெற்ற வாடகை ரூ.10,000

23) திருமதி.ரேவதி ரூ.1,20,000 முதலுடன் 1.4.2003 அன்று தொழில் தொடங்கினார்.அவர் ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 வீதம் தன சொந்த செலவிற்கு எடுத்துக் கொண்டார்.அவர் ரூ.20,000 கூடுதல் முதலாக இட்டார்.அவருடைய 31.3.2004 அன்றைய நிலை கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூ |
|---|---|
| வங்கி இருப்பு | 8,000 |
| சரக்கிருப்பு | 80,000 |
| பற்பல கடனாளிகள் | 50,000 |
| அறைகலன் | 2,500 |
| கை ரொக்கம் | 2,000 |
| பற்பல கடனீந்தோர் | 25,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 1,000 |

அவர் தனது கணக்குகளை ஒற்றைப்பதிவு முறையில் பராமரித்து வருகிறார்.2003-2004 ஆம் ஆண்டிற்க்கான அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

24) உரிய கணக்கீடுகளைப் பராமரிக்காத ஒரு வியாபாரியின் 1.4.2003 மற்றும் 31.3.2004 அன்றைய நிலை கீழே தரப்பட்டுள்ளது.

| **விவரம்** | **1.4.2003** **ரூ** | **31.3.2004** **ரூ** |
|---|---|---|
| ரொக்கம் | 80,000 | 60,000 |
| சரக்கிருப்பு | 5,00,000 | 3,25,000 |
| பற்பல கடனாளிகள் | 2,00,000 | 4,00,000 |
| அறைகலன் | 50,000 | 50,000 |
| இயந்திரம் | 4,00,000 | 4,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 6,00,000 | 7,00,000 |

அவ்வாண்டில் இடையில் அவர் ரூ.75,000 கூடுதல் முதலிட்டார்.
அறைகலன் மற்றும் இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.
2004 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

25) தேவையான கணக்குகளைத் தயார் செய்து மொத்தக் கொள்முதல் மற்றும் மொத்த விற்பனைக் காண்க

| | ரூ |
|---|---|
| பற்பல கடனாளிகள் - தொடக்க இருப்பு | 50,000 |
| பற்பல கடனீந்தோர் - தொடக்க இருப்பு | 30,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 3,00,000 |
| பெற்ற தள்ளுபடி | 1,500 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 20,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள் திருப்பம் | 6,000 |
| வெளித் திருப்பம் | 8,000 |
| பற்பல கடனாளிகள் - இறுதி இருப்பு | 35,000 |
| பற்பல கடனீந்தோர் - இறுதி இருப்பு | 25,000 |
| ரொக்கக் கொள்முதல் | 12,000 |
| ரொக்க விற் பனை | 24,000 |

26) 31.3.98அன்றைய இருப்பாய்வு கீழ்க்காணும் விவரங்களைத் தருகிறது.

| | **வரவு ரூ.** | **பற்று ரூ.** |
|---|---|---|
| முதல் | - | 5,00,000 |
| எடுப்பு (1.7.97) | 50,000 | - |

எடுப்பு மீது வட்டி 5% அனுமதிக்க.சரிக்கட்டுப் பதிவும்,மாற்றுப் பதிவும் தந்து, இவை இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

27) கீழ்க்காணும் விவரங்கள் ஒரு நிறுவனத்தின் 2003 மார்ச் 31ம் நாளைய இருப்பாய்விலிருந்து எடுக்கப்பட்டவை
2003 மார்ச் 31 ம் நாளைய இருப்பாய்வு

| விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 11,000 | |
| வாராக் கடன் | 1,000 | |
| பற்பல கடனீந்தோர் | | 6,000 |

சரிக்கட்டுதல்கள் :
1. வாராக்கடன் ரூ .1,000 போக்கெழுதுக
2. கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக
3. கடனாளிகள் மீது 5%ம் , கடனீந்தோர் மீது 2% ம் தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக
இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு இடம் பெறும் எனக் காட்டுக

28) திரு அரவிந்த் என்பவர் தனது ஏடுகளை ஒற்றைப் பதிவு முறையில் பராமரித்தது வருகிறார். அவர் ரூ 1,20,000 முதலுடன் 1.04.2010 அன்று தொழில் தொடங்கினார்.அவர் ஒவ்வொரு மதமும் ரூ 2,000 விதம் தன சொத்து செலவிற்கு எடுத்துக் கொண்டார். அவர் ரூ 10,000 முதலாக இட்டார்.அவரது 31.3.2011 ன்றைய நிலை கீழ்வருமாறு :

| | ரூ |
|---|---|
| வாங்கி இருப்பு | 8,000 |
| சரக்கிருப்பு | 80,000 |
| பற்பல கடனாளிகள் | 50,000 |
| அறைகலன் | 2,500 |
| கை ரொக்கம் | 3,000 |
| பற்பல கடனீந்தோர் | 25,000 |
| கொடுக்கப்பட வேண்டிய செலவுகள் | 1,000 |

2010-11 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக

29) 2002 மார்ச் 31ம் நாளைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.1,25,000.
சரிக்கட்டுதல்கள்:

1. வாராக் கடன் ரூ.5,000 போக்கெழுதுக
2. கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக
3. கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக
பதிவுகள் தந்து இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு இடம் பெறும் எனக்காட்டுக

30) திரு . தீபக் அவர்களின் 31.3.2005 அன்றைய இருப்பாய்வு கீழ்க்காணும் விவரங்களைத் தருகிறது
பற்பல கடனாளிகள் ரூ .1,92,000
வாராக் கடன் ரூ .3,600
வாரா ஐயக் கடன் ஒதுக்கு ரூ .8,400
சரிக்கட்டுதல் : பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக
சரிக்கட்டு பதிவு தந்து இவ்விவரங்கள் இருப்பு நிலைக் குறிப்பில் எவ்வாறு இடம் பெறும் எனக்காட்டுக

31) 31.3.04 அன்றைய இருப்பாய்வு கீழ்கண்ட விவரங்களைத் தருகிறது.

| | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| வங்கிக்கடன் 10% (1.4.03) | - | 10,00,000 |
| வட்டி கொடுத்தது | 60,0000 | |

கொடுபட வேண்டிய வட்டிக்கு வகை செய்க
சரிக்கட்டு பதிவு தந்து , இவ்விவரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

32) கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு சரிகட்டுப் பதிவுகள் தருக.
1. கொடுபட வேண்டிய சம்பளம் ரூ.20,000
2. முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு முனைமம் ரூ.400
3. முதலீடுகள் மீதான கூடியுள்ள வட்டி ரூ.1,000
4. முன்கூட்டிப் பெற்ற கழிவு ரூ.2,000
5. முதல் ரூ. மீது 10% வட்டி அனுமதிக்க
6. இறுதிச் சரக்கிருப்பு ரூ.4,00,000.

33) 31.3.2004 அன்றைய இருப்பாய்வின்படி இயந்திரத்தின் மதிப்பு ரூ .50,000. இயந்திரத்தின் மீது 10% தேய்மானம் நீக்கப்படவேண்டும்.சரிக்கட்டுப் பதிவு தந்து, இவ்விவரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

34) திரு.நூர்முகமது அவர்களின் மார்ச் 31,2005 அன்றைய இருப்பாய்விலிருந்து எடுக்கப்பட்ட இருப்பு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன

| விவரம் | பற்று ரூ | வரவு ரூ |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 2,00,000 | |
| வாராக் கடன் | 10,000 | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு | | 15,000 |
| பற்பல கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு | | 1,000 |
| அளித்த தள்ளுபடி | 20,000 | |

சரிக்கட்டுதல்கள் :
1. பற்பல கடனாளிகள் மீது 10% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக
2. பற்பல கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக
இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் ?

35) கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்கு, சரிக்கட்டுப் பதிவுகளும் ,மாற்றுப் பதிவுகளும் தருக.
(அ)எடுப்புகள் மீதான வட்டி ரூ.5,000
(ஆ)இயந்திரம் மீதான தேய்மானம் ரூ 4,000
(இ)போக்கெழுத வேண்டிய வாராக்கடன் ரூ 2,000.

36) கீழ்க்காணும் சரிக்கட்டு 2000 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.
பற்பல கடனாளிகள் ரூ. 21,000
சரிக்கட்டுதல்:
வாராக்கடன் ரூ .1,000 போக்கெழுதுக.
கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கும் , 2% தள்ளுபடி ஒதுக்கும் உருவாக்குக.

37) கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தருக.
(அ) இறுதிச் சரக்கிருப்பு ரூ.6,00,000
(ஆ)முதல் ரூ .16,00,000 மீது 6% வட்டி அனுமதிக்க.
(இ)வாடகை முன்கூட்டிப் பெற்றது ரூ.5000
(ஈ)முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ரூ.2,000
(உ )காப்பீட்டு முனைமம் முன் கூட்டிச் செலுத்தியது ரூ.1,000.
(ஊ)கொடுபடவேண்டிய கூலி ரூ.15,000

38) இருப்பாய்விற்கு (31.3.2005) வெளியே சரிக்கட்டுதலில் இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.2,50,000 எனக் காட்டப்பட்டுள்ளது.சரிக்கட்டுப் பதிவு தருக.மேலும் இவ்விவரம் இறுதிக் கணக்குகளில் (31.3.2005) எவ்வாறு காட்டப்பெறும்?

39) கீழ்காணும் விவரங்கள் திரு.பாரத் அவர்களின் 2002 மார்ச் 31ம் நாளை இருப்பாய்விலிருந்து எடுக்கப்பட்டவை :

| விவரம் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 2,01,200 | |
| வாரா கடன் | 9,400 | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு | | 24,000 |
| கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு | | 1,200 |
| அனுமதித்த தள்ளுபடி | 18,600 | |

சரிக்கட்டுதல்கள் :
1.வாராக்கடன் ரூ .4,800 கூடுதலாகப் போக்கெழுக
2.கடனாளிகள் மீது 10% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக
3.கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக
இவ்விவரங்கள் இலாப நட்டக் கணக்கிலும் , இருப்பு நிலைக் குறிப்பிலும் எவ்வாறு தோன்றும் ?

40) 31.3.2003 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.60,000. வாராக்கடன் ரூ.4000 போக்கெழுதுக.சரிக்கட்டுப் பதிவு தந்து, இவ்விவரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

**Work Hard ... Success is Yours ...**

****************************************